**STC. No. 221/2023**
PW .1
20.11.2025
Name : திரு. ராஜேஷ்

திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி தாலுகா, நம்பிதலைவன்பட்டயம் கிராமம், வன்னியன் குடியிருப்பு நடுத்தெரு, கதவு எண் 39 என்ற முகவரியில் குடியிருந்து வரும் சுடலைமுத்து நாடார் மகன் ராஜேஷ் வயது 51 ஆகிய நான் சத்திய பிரமாணத்தின் பேரில் கூறுவது என்னவென்றால்,

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது வாக்குமூலத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இதனுடன் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

**புகார்தாரர் ஆவணங்கள்**

| | |
|---|---|
| ம.ஆ.1 | 06.02.2023 ம் தேதியிட்ட ரூபாய்.10,00,000/–க்கான தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி பணகுடி கிளை, காசோலை எண் 111596 அசல் |
| ம.ஆ.2 | 09.02.2023 ம் தேதியிட்ட தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி ஏர்வாடி கிளை, காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கான செலான் அசல் |
| ம.ஆ.3 | 09.02.2023 ம் தேதியிட்ட தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி ஏர்வாடி கிளை, காசோலை திருப்பப்பட்டதற்கான ரிட்டன் மெமோ அசல் |
| ம.ஆ.4 | 10.02.2023 ம் தேதியிட்ட புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் |
| ம.ஆ.5 | 11.02.2023 ம் தேதியிட்ட எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |
| ம.ஆ.6 | 21.02.2023 ம் தேதியிட்ட எதிரி தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் |
| ம.ஆ.7 | 01.04.2022 முதல் 06.02.2023 ம் வரை தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, ஏர்வாடி கிளை வரவு செலவு பட்டியல் சான்றிட்ட நகல் |

இத்துடன் புகாரின் படி உத்தரவிடுமாறு கேட்டுகொள்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.